**SEC 1 REVISION EXAM REVISION WORKSHEETS (PAPER 2) - LEVEL 1**
**உயர்நிலை 1 சாதாரண நிலை தேர்வுப் பயிற்சித்தாள் (தாள் 2) - நிலை 1**

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | தேர்வுத்தாள் 1 | 1 - 9 |
| 2 | தேர்வுத்தாள் 2 | 10 - 18 |
| 3 | தேர்வுத்தாள் 3 | 19 - 27 |
| 4 | தேர்வுத்தாள் 4 | 28 - 36 |
| 5 | தேர்வுத்தாள் 5 | 37 - 45 |
| 6 | தேர்வுத்தாள் 6 | 46 - 54 |
| 7 | தேர்வுத்தாள் 7 | 55 - 63 |
| 8 | தேர்வுத்தாள் 8 | 64 - 72 |
| 9 | தேர்வுத்தாள் 9 | 73 - 81 |
| 10 | தேர்வுத்தாள் 10 | 82 - 90 |
| 11 | தேர்வுத்தாள் 11 | 91 - 99 |
| 12 | தேர்வுத்தாள் 12 | 100 - 108 |
| 13 | அருஞ்சொற்கள் (தேர்வுத்தாள் 1 to 12) | 109 - 119 |
| 14 | விடைத்தாள்கள் | 120 - 138 |


WORDSMITH
BEYOND LEARNING

# தேர்வுத்தாள் 1

/70

‘அ’ பிரிவு

**A1 மரபுத்தொடர்கள், இணைமொழிகள், செய்யுள்கள் (10 மதிப்பெண்கள்)**

**கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற சொற்றொடர்கள் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொற்றொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

Q1 சதுரங்கப போட்டியில் தனது மகன் வெற்றியாளராக அறிவிக்கப்பட்ட செய்தியைக் கேட்டு திரு. தயாளன் ______________________________ போனார்.

Q2 கபிலன் கணித **நுணுக்கங்களை** ______________________________ சிறந்த கணித **மேதை**யாக விளங்கினார்.

Q3 நீர் இன்றி உலகத்தில் உயிரினங்கள் வாழ இயலாது என்பதால் ______________________________ பழிக்காதே என்று பெரியவர்கள் கூறியுள்ளனர்.

Q4 கபிலன் தன்னிடம் கூறப்படும் இரகசியங்களைப் பிறரிடம் பகிர்ந்து கொள்வதால் எல்லோரும் அவனை ______________________________ என்று கேலி செய்தனர்.

Q5 பாலா வாழ்வில் வேலை ஏதும் செய்யாமல் பல கோடி சம்பாதிப்பதாக ______________________________ கட்டி வாழ்ந்தான்.

| | |
|---|---|
| 1. மனக்கோட்டை | 6. இன்பதுன்பம் |
| 2. தாயையும் தண்ணீரையும் | 7. உச்சிக் குளிர்ந்து |
| 3. ஊண் உறக்கம் | 8. தட்டிக் கொடுத்து |
| 4. கரைத்துக் குடித்து | 9. ஓட்டைவாய் |
| 5. தானதர்மம் | 10. கிணற்றுத் தண்ணீரை |

WORDSMITH BEYOND LEARNING EQ SKILLS = JUMP GRAPES + achieve BIG

**A2 முன்னுணர்வுக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)**

**கீழ்வரும் பகுதியில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற அமைப்புச் சொற்கள் பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

தமிழர்களுடைய கலாச்சாரத்தில் முக்கியப் பங்கு வகிப்பது வாழை இலை. வாழையிலை ஒரு **கிருமிநாசினி**யாகும். இது உணவில் உள்ள Q6. ______________________________ **கிருமி**களை அழிக்கும் தன்மை கொண்டது. வாழை இலையில் உணவு உண்பது தமிழர்களின் பாரம்பரியம். இவ்வாழையிலையில் சோறுண்டால் ஆரோக்கியம் மேம்படும் என்று நம்புகின்றனர். அதனால்தான், வீட்டிற்கு வரும் Q7. ______________________________ வாழை இலையில் உணவைப் பரிமாறுகின்றனர். வாழையிலையின் மேல் உள்ள பச்சையம், உணவை எளிதில் **சீரணிக்க**ச் செய்வதுடன் வயிற்றுப் புண்ணை ஆற்றும் தன்மையும் கொண்டது. சூடான உணவுகளை வாழை இலையில் பரிமாறும்போது ஏற்படும் Q8. ______________________________ பசியினைத் தூண்டுகிறது. இச்சக்தியை வேறு எந்தப் பொருள்களாலும் உருவாக்க முடியாது. வாழையிலையில் உணவு உண்டு வந்தால் தோல் பளபளப்பாகும். மந்தம், வலிமைக்குறைவு, இளைப்பு போன்ற பாதிப்புகளில் இருந்து Q9. ______________________________ முடியும். மேலும், இளநரை வராதபடி தடுக்கலாம். தீ விபத்திலிருந்து மீண்டவர்களையும், தீக்காயம் பட்டவர்களையும் வாழை இலையின் மீது Q10. ______________________________ வைத்தால் அதில் உள்ள பச்சையம் தீக்காயத்தின் எரிச்சலைப் போக்கும். தீப்புண்கள் குணமாக இவ்வாழையிலையில் எண்ணெயைத் தடவிக் கட்டுவார்கள்.

| | |
|---|---|
| 1. மணம் | 6. படுக்க |
| 2. நச்சு | 7. பகைவர்களுக்கு |
| 3. நிலைத்திருக்க | 8. பசிக்க |
| 4. சுவை | 9. விருந்தினர்களுக்கு |
| 5. அமர | 10. விடுபட |

WORDSMITH BEYOND LEARNING

**A3 பிழை திருத்தம் (10 மதிப்பெண்கள்)**

**கீழ்க்காணும் பகுதியின் இடப்பக்கத்தில் ஐந்து வினாக்களின் எண்கள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் எதிரிலுள்ள வரியில் கோடிடப்பட்டுள்ள சொல் பிழையாக உள்ளது. அந்தப் பிழையானப் சொற்களைத் திருத்தி அச்சொற்களின் சரியான வடிவத்தை எழுதவும்.**

| | |
|---|---|
| | வரலாறு என்பது பொதுவாக எழுத்துகள், சித்திரங்கள் அல்லது வாய்வழியாக நம் |
| | மூதாதையர்களால் நமக்கு கூறப்பட்டதாகும். அவற்றின் உண்மைத் தன்மையை |
| Q11 | அறிவதற்குப் பல சான்றுகளையும், பல அறிஞர்களை மற்றும் எழுத்தாளர்களின் |
| | கூற்றுகளையும் ஆராய்வது மிகவும் அவசியம். ஏனென்றால், அக்காலத்தில் |
| Q12 | வாழ்பவர்கள் தனக்காகத் தன்னைப் போற்றும் விதமாக எழுதிய கதைகளும் வரலாறு |
| | குறிப்புகளாக இடம் பெற வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, வரலாற்றினை ஒரு |
| Q13 | மூலத்திலே படிப்பது மட்டும் சரியான தகவல் புரிதலுக்கு வித்திடாது. மேலும், |
| Q14 | வரலாற்றினைப் படிப்பதன் மூலமாக நம் வளங்களையே எவ்வாறு பாதுகாப்பது, |
| | எதிர்கால சந்ததியினருக்கு எவ்வாறு அவற்றைப் பரிசாகக் கொடுப்பது என்பதைப் |
| | பற்றிய புரிதல் கிடைக்கும். வரலாற்றினைப் பதிவு செய்தல் எவ்வளவு அவசியம் |
| Q15 | என்பதை வரலற்று நிகழ்வுகளைப் படிக்கின்ற போதுதான் நமக்கு புரிய வரும். எனவே, |
| | ஒவ்வொரு மனிதரும் வரலாற்றை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்ட முன் வர |
| | வேண்டும். |

Q11 ____________________________

Q12 ____________________________

Q13 ____________________________

Q14 ____________________________

Q15 ____________________________

## ‘ஆ’ பிரிவு

**B4 தெரிவுவிடைக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியிற் காணும் வினாக்களுக்கு விடை தருக. வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு தெரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை எழுதுக.**

**பகுதி 1**



இன்று நேரத்தைக் கண்டறிய பல்வேறு கடிகாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால், **ஆதி**காலத்தில் எவ்வாறு நேரத்தைக் கண்டறிந்தனர் என்று தெரியுமா? ஆதியில் மரங்களின் நிழல்களைப் பார்த்து மக்கள் நேரத்தைக் கணக்கிட்டார்கள். நிழலின் நீளம் குறைந்து வந்தால் நண்பகல் நெருங்கி விட்டதாகக் கண்டார்கள். நிழல் கிழக்கில் நீண்டு சென்றால் மாலை நெருங்குவதை அறிந்தார்கள். இம்முறையின் மூலம் பகலில் மட்டுமே நேரத்தைக் கணக்கிட முடியும். இரவிலும், மேக மூட்டமுள்ள நாட்களிலும் நேரத்தை அளப்பதற்காக நீர்க்கடிகாரம் என்ற கருவியைக் **கையாண்டனர்**. ஆனால், இதைக் காலை மற்றும் மாலைப் பொழுதுகளில் பயன்படுத்த முடியாது. சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்பே சீனர்கள் இதைப் பயன்படுத்தினர். இந்தியர், எகிப்தியர், கிரேக்கர் மற்றும் ரோமனியர்கள் இதை அறிந்திருந்தனர். நீர்க்கடிகாரங்களில் பல வகைகள் இருந்தன. ஒரு பாத்திரத்தில் நீரை நிரப்பி வைப்பார்கள். இதிலுள்ள ஒரு சிறு துளை வழியாக ஒரே **சீராகத்** துளித் துளியாக நீர் விழுந்து கொண்டேயிருக்கும். இவ்விதம் விழுந்த நீரின் அளவைக் கொண்டு நேரத்தை அளவிட்டனர். இம்முறை பண்டைவாழ் மக்களின் அறிவுத் திறனை வெளிக்காட்டுகிறது.

Q16 பண்டைக் காலத்தில் மக்கள் எவ்வாறு நேரத்தைக் கண்டறிந்தனர்?

1. திசைகளைப் பார்த்து
2. நிழலைப் பார்த்து
3. நீரைப் பார்த்து
4. மரங்களைப் பார்த்து ( )

Q17 நீர்க்கடிகாரத்தை மக்கள் எப்பொழுது பயன்படுத்தினர்?

1. பகல் நேரங்களில்
2. காலைப் பொழுதுகளில்
3. மாலைப் பொழுதுகளில்
4. இருண்டிருக்கக்கூடிய காலங்களில் ( )

**பகுதி 2**



மனிதனுடைய வாழ்க்கை இலையின் மேல் இருக்கும் பனித்துளியைப் போன்றதே. அந்தப் பனித்துளிகள் பளபளவென்று **பிரகாசித்து**க் கொண்டிருந்தாலும் ஒரு சில நொடிப்பொழுதே அந்த இலைகளின் மேல் நீடித்து இருக்கும். பின்னர் மறைந்துவிடும். அதேபோல, மனிதனுடைய வாழ்நாளும் குறுகியதே. அந்த வாழ்நாள் எப்போது, எப்படி முடிவுக்கு வரும் என்பதைப் பற்றி எவருக்கும் உறுதியாய்த் தெரியாது. ஆதலால், ஒவ்வொரு மனிதனும் தன்னால் இயன்ற அளவுக்குச் சமூகத்திற்குச் சேவையாற்ற வேண்டும். இதனையே நம்முடைய சமய நூல்களெல்லாம் **வலியுறுத்தி**க் கூறுகின்றன. சந்தேகமில்லாமல் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட வகையில் தேவைகள் இருக்கின்றன. அதுமட்டுமில்லாமல் விருப்பு, வெறுப்பு மற்றும் பலவற்றையும் அனுபவிக்க வேண்டும் என்ற பேராசையும் இருக்கின்றது. ஆனால், மனிதன் தன்னுடைய வாழ்நாளை எல்லாம் இவற்றை அடைவதிலேயே காலம் கழிப்பான் என்றால், இந்த உலகத்தில் அவன் பிறந்ததன் குறிக்கோள்தான் என்ன? **தன்னலத்தோடு** தனக்காகவும் தன் குடும்பத்திற்காகவும் மட்டுமே ஒருவன் வாழ்வது எந்தக் குறிக்கோளும் இல்லாத பயணம் போன்றதாகும்.

WORDSMITH
BEYOND LEARNING

Q18 இப்பத்தியில் மனித வாழ்க்கை எதற்கு ஒப்பிடப்பட்டுள்ளது?

1. தன்னலமற்ற சேவைக்கு
2. குறிக்கோள் இல்லாத பயணத்திற்கு
3. இலைமேல் படிந்துள்ள பனித்துளிக்கு
4. குறுகிய வாழ்க்கைக்கு ( )

Q19 சமய நூல்கள் எதனைப் போதிக்கின்றன?

1 வாழ்நாள் எப்போது முடிவுக்கு வரும் என்பதை
2. சமூகத்திற்கு முடிந்த வரையில் பணியாற்ற வேண்டும் என்பதை
3. குடும்பத்திற்காக உழைக்க வேண்டும் என்பதை
4. ஒருவன் வாழ்க்கையை எப்படி அனுபவிக்க வேண்டும் என்பதை ( )

Q20 தன்னல வாழ்க்கை என்பது என்ன?

1. தனக்காகவும் குடும்பத்திற்காகவும் வாழ்வது
2. தனக்காகவும் பிறருக்காவும் வாழ்வது
3. தனக்காகவும் சமூகத்திற்காகவும் வாழ்வது
4. குறிக்கோள் இல்லாமல் வாழ்வது ( )

## ‘இ’ பிரிவு

**C5 சுயவிடைக் கருத்தறிதல் (30 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியிற் காணும் வினாக்களுக்கு உம் சொந்த நடையில் விடை தருக.**



1. ‘சந்தர்ப்பம்’ என்று கூறுவதை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். தேவையான சந்தர்ப்பங்களைத் தேடிப் பெறுபவர்கள்தான் முன்னேற்றம் காண்பார்கள்” என்கிறார் பெர்னாட்ஷா.

2. “வாழ்க்கையில் உயர்வடைய என்னால் முடியவில்லையே என்று கூறி அழுது கொண்டிருக்காதே. முன்னேறுவதற்கான பல சந்தர்ப்பங்கள் உன் முன்னர் தோன்றியபோதெல்லாம் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளாத உன் **<u>அறியாமை</u>**யை நீ என்றாவது எண்ணிப் பார்த்ததுண்டா?” என்கிறார் ஜார்ஜ் பிராண்ட் என்ற ஆங்கில நாட்டு அறிஞர்.

3. நல்ல சந்தர்ப்பங்கள் எல்லாம் நம்மிடம் அடைக்கலமாகும்பொழுது அலட்சியப்படுத்திவிட்டு, சந்தர்ப்பம் சரியாகவே அமையவில்லை என்று கூறுவது எந்த விதத்திலும் நியாயமானதல்ல. சரியான நேரத்திற்குப் பேருந்தில் போகாமல் அதனைத் தவறவிட்டுவிடுவது நம் தவறு. குறிப்பிட்ட காலத்திற்குள் சென்றால் பேருந்தில் பயணம் செய்ய முடியும் என்று அறிந்திருந்தும் **<u>அலட்சியப்படுத்துவது</u>** நம்முடைய குறைபாடே தவிர பேருந்தின் குறைபாடல்ல.

4. இதுபோலவே சந்தர்ப்பமும். எந்த நேரத்தில் எந்தச் செயலைச் செய்யலாம் என்று அறியும் அறிவு இருந்தும் அதனைப் பயன்படுத்தாமல் விட்டு விடுவது நம்முடைய குற்றமே. உண்ணும் முறையிலும் ஒரு **<u>வரையறை</u>** உண்டு. அதன்படி செயல்பட்டால் ஆரோக்கியமாக வாழலாம். அதிலும் நம்முடைய அலட்சியத்தைக் காட்டினால் உடல் நோய் வாய்ப்படும். உண்பதிலும் கால **<u>நிர்ணயம்</u>** உண்டு. காலை உணவு சத்தாக, ஆனால் இலேசாக இருக்க வேண்டும். மதிய உணவின் அளவு கூடுதலாகவும், இரவு உணவு எளிதில் ஜீரணம் ஆகக்கூடியதாகவும் இருக்க வேண்டும் என்பது முறை. இதனை **<u>முற்றிலும்</u>** மாற்றியமைத்துச் சாப்பிட்டுவிட்டு என் உடல் நலம் கெட்டுவிட்டதே என்று வருத்தப்படுவது சரியல்ல.

5. உணவைக் கூட காலத்தோடு உண்பதைப் போல அமைகின்ற சந்தர்ப்பத்தை அதற்கு ஏற்ற வகையில் பயன்படுத்திச் செயல்படுவதுதான் வெற்றிக்குரிய வழியாகும். நாம் மேற்கொண்டிருக்கும் செயலை எந்தச் சமயத்தில் செய்தால் வெற்றி பெற முடியும் என்பதைத் தெரிந்து கொண்டு அதற்கேற்ப செயல்பட வேண்டும். எதைச் செய்தாலும் **காலமறிந்து** செய்ய வேண்டும். "இவ்வாறு எந்தச் சின்ன விஷயமாக இருந்தாலும் காலமறிந்து செயல்படும் பழக்கம் என்னிடம் அமைந்து விட்டது. இதுதான் நான் வாழ்க்கையில் முன்னேற உதவியது" என்று கூறினார் அமெரிக்க ஜனாதிபதி ஜேஸன்ஹோவர்.

6. நம்முடைய கால நேரத்தைச் **செம்மை**யாகப் பயன்படுத்துவதன் மூலம் சந்தர்ப்பத்தையும் சரியாக அமைத்துக் கொள்ள முடியும். காலம் என்பதே சந்தர்ப்பம்தான். காலத்தைக் கவனித்துக் கருத்துடன் **செயல்பட்டால்** வாழ்க்கையில் **நிச்சயமாக** வெற்றி பெற முடியும்.

**வினாக்கள் (26 மதிப்பெண்கள்)**

Q21 சந்தர்ப்பம் பற்றிய கவிஞர் பெர்ட்னாட்ஷாவின் கருத்து என்ன? (4 மதிப்பெண்கள்)

WORDSMITH BEYOND LEARNING

Q22 எவற்றை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும் என ஜார்ஜ் பிராண்ட் கூறுகிறார்? (4 மதிப்பெண்கள்)

Q23 சந்தர்ப்பத்தை எப்போது நாம் குறை சொல்லக்கூடாது? (4 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

Q24 உண்ணும் உணவில் எத்தகைய முறையைக் கடைப்பிடிக்க வேண்டும்? (4 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

WORDSMITH
BEYOND LEARNING
EQ SKILLS = JUMP gVades + achieve Big

Q25 எந்த ஒரு செயலையும் எவ்வாறு தொடங்க வேண்டும்? (5 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

Q26 வாழ்வில் வெற்றிபெற எத்தகைய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்? (5 மதிப்பெண்கள்)

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

**இடம் நோக்கி பொருள் எழுதுக (4 மதிப்பெண்கள்)**

**பின்வரும் சொற்களுக்கு இணையான சொற்கள் வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பத்தியில் இடம் பெற்றுள்ளன. அதனைக் கண்டறிந்து விடைத்தாளில் எழுதுக.**

Q27 பத்தி 1-இல் 'வாய்ப்பு' என்னும் சொல்லுக்கு இணையாக இடம் பெற்றுள்ள வேறு சொல் எது? (2 மதிப்பெண்கள்)

______________________________

Q28 பத்தி 4-இல் 'செரிமானம்' என்பதை எந்தச் சொல் உணர்த்துகிறது? (2 மதிப்பெண்கள்)

______________________________

WORDSMITH
BEYOND LEARNING
EQ SKILLS = JUMP GRADES + ACHIEVE BIG

# தேர்வுத்தாள் 2

/ 70

**‘அ’ பிரிவு**

**A1 மரபுத்தொடர்கள், இணைமொழிகள், செய்யுள்கள் (10 மதிப்பெண்கள்)**

**கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற சொற்றொடர்கள் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொற்றொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

Q1 தீவிரவாதிகள் கொஞ்சம்கூட ______________________________ இல்லாமல் **<u>அப்பாவி</u>** மக்களைக் கொல்கின்றனர்.

Q2 அலுவலகத்தில் தொழிலாளர்கள் செய்யும் வேலைகளை மனோஜ் ______________________________ முதலாளியிடம் புகார் செய்தான்.

Q3 ______________________________ அமுதமும் நஞ்சு என்பதற்கேற்ப நாம் தினசரி வாழ்வில் உணவுகளை அளவோடு உண்பது சிறப்பு.

Q4 **<u>அருவினை</u>** என்ப உளவோ கருவியான் ______________________________ செயின்

Q5 அக்காவின் திருமண நிகழ்வு நெருங்கி விட்டதால் வீட்டைத் துப்புரவுச் செய்த மீனாட்சி ______________________________ அனைத்தையும் தூக்கி எறிந்தாள்.

| | |
|---|---|
| 1. ஈவிரக்கம் | 6. ஓட்டை உடைசல் |
| 2. ஊண் உறக்கம் | 7. காலம் அறிந்து |
| 3. அறிந்து காலம் | 8. ஆற அமர |
| 4. அளவுக்கு மிஞ்சினால் | 9. நோட்டம் பார்த்து |
| 5. கதைகட்டி | 10. கையில் பத்து மிளகு |

**A2 முன்னுணர்வுக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)**

**கீழ்வரும் பகுதியில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற அமைப்புச் சொற்கள் பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

நீரில்லையென்றால் இந்த உலகமே இயங்காது. மனிதனின் அனைத்துச் **செயல்பாடு**களுக்கும் தண்ணீர் மிகவும் Q6. ______________________________. ஒவ்வொரு மனிதனும் அன்றாடம் இரண்டு லிட்டர் நீர் அருந்த வேண்டும். ஆனால், இன்றைய இளையர்கள் நீர் அருந்துவதை விட்டுவிட்டுப் பல வண்ணங்களில் உள்ள குளிர்பானங்களைத் தண்ணீர்போல் **பருகி** வருகின்றனர். சுத்தமான தண்ணீரை எவ்வளவு வேண்டுமானாலும் குடிக்கலாம். அது உடலுக்கு எந்த Q7. ______________________________ செய்யாது; தாகத்தையும் **தீர்**க்கும். ஆனால், குளிர்பானங்கள் அப்படிப்பட்டதல்ல. சுவை மிகுந்ததாகவும் கண்ணைக் கவர்வதாகவும் இருப்பதால் அனைவராலும் விரும்பப்படுகின்றன. குளிர்பானங்கள் புட்டிகளில் அடைக்கப்பட்டு நீண்ட நாட்கள் Q8. ______________________________ அமிலம் பயன்படுத்தப்படுகிறது. இந்த **அமிலம்** ஆஸ்துமா, பரு முதலியவற்றை உண்டாக்குகிறது. அதன் நிறம், மணம் மாறாதிருக்க மற்றொரு அமிலம் சேர்க்கப்படுகிறது. இறுதியாக, இப்புட்டிகளில் காற்று செயற்கையாக அடைக்கப்படுகிறது. இதுபோன்ற குளிர்பானங்களைத் தொடர்ந்து குடித்து வந்தால் நம் நரம்புகள் பாதிக்கப்பட்டு விரைவில் உடல் நலிவுறுகிறது. மேலும், இவை உடலிலுள்ள கொழுப்புகளை Q9. ______________________________ உடல் பருமன் ஏற்பட்டு நாளடைவில் பக்கவிளைவுகளை உண்டாக்குகின்றன. அதனால்தான், ஆரஞ்சு மற்றும் மஞ்சள் நிற பானங்களைப் பின்லாந்து, நார்வே போன்ற நாடுகளும், சிவப்பு நிற பானங்களை அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளும் Q10. ______________________________ செய்துள்ளன. உடலுக்குத் தீங்கு **விளைவிக்கின்ற** பிற நாட்டுக் குளிர்பானங்களைத் தவிர்ப்பது நம் உடலுக்கு நலன் **பயக்கும்**.

| | |
|---|---|
| 1. அதிகரிப்பதால் | 6. கெடுதலும் |
| 2. தீங்கும் | 7. நம்மால் |
| 3. நம்மை | 8. நன்மையும் |
| 4. கெடாமலிருக்க | 9. அவசியம் |
| 5. குறைப்பதால் | 10. தடை |

WORDSMITH BEYOND LEARNING

**SEC 1 REVISION EXAM REVISION WORKSHEETS (PAPER 2) - LEVEL 1**
**உயர்நிலை 1 சாதாரண நிலை தேர்வுப் பயிற்சித்தாள் (தாள் 2) - நிலை 1**

# அருஞ்சொற்பொருள்

| தேர்வுத்தாள் 1 | | | |
|---|---|---|---|
| **எண்** | **அருஞ்சொல்** | **பொருள்** | **English Meaning** |
| 1. | நுணுக்கம் (நுணுக்கங்களை) | உத்தி | Technique |
| 2. | மேதை | பெரிய அறிவாளி | Intellectual |
| 3. | கிருமிநாசினி | நோய் தடுப்பு மருந்து | Antiseptic |
| 4. | கிருமி | தீய சக்தி | Germ |
| 5. | சீரணிக்க | செரிமானமாக | Digest |
| 6. | ஆதி | தொடக்கம் | Ancient |
| 7. | கையாள்தல் (கையாண்டனர்) | பயன்படுத்துதல் | Use |
| 8. | சீராக | ஒழுங்காக | Proper |
| 9. | பிரகாசித்தல் (பிரகாசித்து) | ஒளிவீசுதல் | Shining |
| 10. | வலியுறுத்தல் (வலியுறுத்தி) | நினைவுறுத்தல் | Compel |
| 11. | தன்னலம் (தன்னலத்தோடு) | சுயநலம் | Selfish |
| 12. | அறியாமை | தெளிவின்மை | Innocent |
| 13. | அலட்சியம் (அலட்சியப்படுத்துவது) | கண்டு கொள்ளாமல் | Don’t care |
| 14. | வரையறை | எல்லை | Limit |
| 15. | நிர்ணயம் | கட்டுப்பாடு | Control |
| 16. | முற்றிலும் | முழுவதும் | Full |
| 17. | காலமறிந்து | நேரமறிந்து | Timeline |
| 18. | செம்மை | முறை | Wise |
| 19. | செயல்பட்டால் | நடந்து கொண்டால் | Following |
| 20. | நிச்சயம் (நிச்சயமாக) | உறுதி | Sure |

**SEC 1 - O-LEVEL EXAM REVISION WORKSHEETS (PAPER 2 - LEVEL 1)**
**உயர்நிலை 1 - சாதாரண நிலை தேர்வுப் பயிற்சித்தாள் நிலை 1 (தாள் 2)**

# விடைத்தாள்

## தேர்வுத்தாள் 1

**A1 மரபுத்தொடர்கள், இணைமொழிகள், செய்யுள்கள்**

| | | |
|---|---|---|
| Q1 | உச்சிக் குளிர்ந்து | (7) |
| Q2 | கரைத்துக் குடித்து | (4) |
| Q3 | தாயையும் தண்ணீரையும் | (2) |
| Q4 | ஓட்டைவாய் | (9) |
| Q5 | மனக்கோட்டை | (1) |

**A2 முன்னுணர்வுக் கருத்தறிதல்**

| | | |
|---|---|---|
| Q6 | நச்சு | (2) |
| Q7 | விருந்தினர்களுக்கு | (9) |
| Q8 | மணம் | (1) |
| Q9 | விடுபட | (10) |
| Q10 | படுக்க | (6) |

**A3 பிழை திருத்தம்**

| | |
|---|---|
| Q11 | அறிஞர்களையும் |
| Q12 | வாழ்ந்தவர்கள் |
| Q13 | மூலத்திலிருந்து |
| Q14 | வளங்களை |
| Q15 | வரலாற்று |

**B4 தெரிவுவிடைக் கருத்தறிதல்**

| | |
|---|---|
| Q16 | 2 |
| Q17 | 4 |
| Q18 | 3 |
| Q19 | 2 |
| Q20 | 1 |

WORDSMITH BEYOND LEARNING EQ SKILLS = JUMP GRADES + ACHIEVE BIG

**C5 சுயவிடைக் கருத்தறிதல்**

Q21 ‘சந்தர்ப்பம்’ என்று சொல்வதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். தேவையான சந்தர்ப்பங்களைத் தேடிப் பெறுபவர்கள்தான் முன்னேற்றம் காண்பார்கள்” என்பதே சந்தர்ப்பம் பற்றிய கவிஞர் பெர்ட்னாட்ஷாவின் கருத்து ஆகும்.

Q22 வாழ்க்கையில் முன்னேற முடியவில்லை என்று அழுது கொண்டிருக்காமல், முன்னேறுவதற்குப் பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்டாலும் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளாத நம் அறியாமையை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று ஜார்ஜ் பிராண்ட் கூறுகிறார்.

Q23 நல்ல சந்தர்ப்பங்கள் நம்மைத் தேடி வரும்பொழுது அவற்றை உதாசினப்படுத்திவிட்டு, சந்தர்ப்பம் முறையாக அமையவில்லை என்று குறை சொல்லக்கூடாது.

Q24 காலை உணவு சத்தாகவும் இலேசானதாகவும் இருக்க வேண்டும். மதிய உணவின் அளவு கூடுதலாகவும் இரவு உணவு எளிதில் செரிமானம் ஆகக்கூடியதாகவும் இருக்க வேண்டும். இதுவே உண்ணும் உணவில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய முறையாகும்.

Q25 நாம் ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன்பு, அதனை எந்தச் சமயத்தில் செய்தால் வெற்றி அடையலாம் என்பதை அறிந்து கொண்டு அதற்கேற்ப செயல்பட வேண்டும். காலமறிந்து செயல்பட்டால் வெற்றி அடையலாம்.

Q26 நாம் நேரத்தைத் திட்டமிட்டு முறையாகப் பயன்படுத்துவதன் மூலம் சந்தர்ப்பத்தையும் சரியாக அமைத்துக் கொள்ளலாம். நேரத்தைக் கருத்தில் கொண்டு கவனமாகச் செயல்படும்பொழுது வாழ்க்கையில் வெற்றி அடைய முடியும்.

Q27 சந்தர்ப்பம்

Q28 ஜீரணம்

## தேர்வுத்தாள் 2

**A1 மரபுத்தொடர்கள், இணைமொழிகள், செய்யுள்கள்**

| | | |
|---|---|---|
| Q1 | ஈவிரக்கம் | (1) |
| Q2 | நோட்டம் பார்த்து | (9) |
| Q3 | அளவுக்கு மிஞ்சினால் | (4) |
| Q4 | காலம் அறிந்து | (7) |
| Q5 | ஓட்டை உடைசல் | (6) |

**A2 முன்னுணர்வுக் கருத்தறிதல்**

| | | |
|---|---|---|
| Q6 | அவசியம் | (9) |
| Q7 | தீங்கும் | (2) |
| Q8 | கெடாமலிருக்க | (4) |
| Q9 | அதிகரிப்பதால் | (1) |
| Q10 | தடை | (10) |